**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**

**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C.C. No: 30/2020**

**Dated: 29.06.2026**

**Deposition of Witnesses for PW - 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திரு.வேல்முருகன்** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023.

**எதிரி ஆஜர். இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aathar card of the Witness verified.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திருச்சி கண்டோன்மெண்ட் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.11.2018-ம் தேதி பாலக்கரை காவல் நிலைய ஆய்வாளருக்கு ரகசிய தகவலாளி கஞ்சா விற்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் ஆய்வாளருக்கு தகலாளிடன் நானும் ஜீவானந்தம் ஆகியோருடன் புறப்பட்டு ரோந்து செய்து கண்காணித்து கொண்டிருந்தபோது சங்கிலியாண்டபுரம் சுப்பையா தெரு வாட்டர் டேங்க் அருகே கஞ்சா விற்பதாக கிடைத்த ரகசிய தகவலை பெற்று அதை கோட்டை சரக சட்டம் மற்றும் ஒழுங்கு உதவி ஆணையர் அவர்களுக்கு தகவல் கொடுத்து அவரின் உத்தரவின்பேரில் தக்க உபகரணங்களுடன் 12.25 மணிக்கு சம்பவ இடம் சென்று கண்காணித்து

கொண்டிருந்தபோது வாட்டர் டேங்க் அருகே ஒரு நபர் சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டிருந்தவர் எங்களை கண்டு தப்பி ஓட முயன்றவரை போலீஸ் பார்ட்டியாகிய நாங்கள் அவரை மடக்கி பிடித்து அவரிடம் பெயர் விலாசம் கேட்க அவர் பெயர் தர்மர் என்ற தர்மராஜ் என்றும் முகவரியை சொன்னார். பின்பு 12.25 மணிக்கு எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். பின்பு எதிரியை உரிய காரணம் கூறி காவல் ஆய்வாளர் கைது அறிவிப்பு தயார் செய்தார். பின்பு அவர் கையில் வைத்திருந்த மஞ்சள் நிற துணி பையை வாங்கி பார்த்தபோது அதில் கஞ்சா என்னும் போதைப் பொருள இருந்தது. அதில் நாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்த்தபோது 1.100 கிகி கஞ்சா இருந்தது. அதிலிருந்து பகுப்பாய்விற்காக 25 கிராம் புரோன் கலர் கவரில் கட்டி SHO சீல் வைத்தும் பின்பு மீதமுள்ள கஞ்சா 1.050 கிராமை அதே மஞ்சள் நிற துணி பையில் கட்டி SHO சீல் வைத்தும் பின்பு எதிரி கஞ்சா விற்ற பணம் ரூ.200/- ஐ கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி அதில் நானும் ஜீவானந்தமும் கையொப்பம் செய்தோம். பின்பு 14.30 மணிக்கு எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து காவல் ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன். எதிரிக்கு கொடுத்த **பரிசோதனை அறிக்கை அதசாஆ.1** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்படுகிறது. **கைது அறிக்கை அதசாஆ.2** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்படுகிறது. எதிரி கொடுத்த ஒப்புதல் **வாக்குமூலத்திலுள்ள 2-வது கையொப்பம் மட்டும் அதசாஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **கைப்பற்றுதல் மகஜர் அதசாஆ.4** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரிக்க விவரம் சொன்னேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கில் ஆய்வாளர் என்னை எந்த தேதியில் எங்கு வைத்து விசாரித்தார் என்றால் விசாரித்தார் ஆனால் எந்த தேதியில் விசாரித்தார் என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. ஆய்வாளர் விசாரணையில் எந்த வாகனத்தில் ரைடுக்கு சென்றதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். வாகனத்தில் சென்றோம். பரிசோதனை அறிக்கை ஒப்புதல் வாக்குமூலம் கைது அறிவிப்பு கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றை யார் எழுதினார் என்றால் எங்கள் காவல் நிலைய ரைட்டர் சக்திவேல் எழுதினார். பரிசோதனை அறிக்கை எந்த தேதி, நேரத்தில், இடத்தில் வைத்து எதிரியை பிடித்ததாகவும் பரிசோதனை செய்ததாகவும் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்படவில்லை. கைது அறிவிப்பு மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவை 12.35 மணிக்கு தயாரிக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாட்டர் டேங்க் எந்த திசையில் எதிரியை பார்த்தோம் எதிரியை பிடித்தோம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். மஞ்சள் நிற பை எந்த வகையான பை என்றால் ஜவுளி கடை பை. அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்றால் அதில் பெயர் எழுதப்படவில்லை. நான் வழக்கு சம்பந்தமாக காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் எந்த கையொப்பமும் செய்யவில்லை. நான் அன்றாட பணிகள் குறித்து வழக்கு சம்பந்தமாக பாக்கெட் டைரி எழுதினீர்களா என்றால் எழுதினேன். அதனை ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தேன். நான் ரைடுக்கு போகவில்லை என்றும் நான் பாக்கெட் டைரி எழுதவில்லை என்றும் ஆய்வாளர் வசம் ஒப்படைத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் பணத்தின் டினாமிநேசன் மகஜரில் சொல்லவில்லை

என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சம்பவ இடத்திற்கு செல்லலில்லை என்றும் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் எதிரியை பார்த்ததாகவும், எதிரியிடம் இருந்து கஞ்சா கைப்பற்றப்பட்டதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. அனைத்து ஆவணங்களும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றும், உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்துவிட்டு தற்சமயம் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாணை:-**

இல்லை.

திறந்த நீதிமனறத்தில் சாட்சி மற்றம் அவரது வழக்குநர்
முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு
சாட்சியிடம் படித்துக் கட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு
சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,

புதுக்கோட்டை.